RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 346 | டிசம்பர்.16 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ராகுல் குறித்து சோனியாவிடம் புகார் அளித்த முன்னாள் எம்எல்ஏ காங்கிரஸில் இருந்து நீக்கம்




புவனேஸ்வர், டிச.16-

ராகுல் குறித்து சோனியாவிடம் கடிதம் மூலம் புகார் அளித்த ஒடிசாவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏவை கட்சியில் இருந்து நீக்கம் செய்து காங்கிரஸ் தலைமை உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் காங்கிரஸ் வலிமை இழந்து வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் தேசிய தலைவருமான சோனியாவுக்கு, ஒடிசாவைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏவும், காங்கிரஸ் நிர்வாகியுமான முகமது மொகிம் என்பவர் கடிதம் எழுதியிருந்தார். மேலும், 5 பக்கம் கொண்ட கடிதத்தில் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜூன கார்கே மற்றும் ராகுல் ஆகியோர் மீதும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தார்.கட்சியின் தலைமைக்கும், அடிமட்ட தொண்டர்களுக்கும் இடையே மிகப்பெரிய இடைவேளை இருப்பதாகவும், 83வயதான கார்கேவால், இளைய சமுதாயத்தினருடன் இணைந்து செயல்பட முடியவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இதன் காரணமாகவே, ஜோதிராதித்ய சிந்தியா, ஹிமாந்த பிஸ்வா சர்மா போன்ற இளம் தலைவர்கள் கட்சியை விட்டு வெளியேறி விட்டதாகவும், தொடர்ச்சியான தவறான முடிவுகள், மோசமான தலைமையும், பொறுப்பான பதவிகளை தகுதியற்றவர்களுக்கு வழங்கியதுதான் காங்கிரஸ் கட்சியின் தொடர் தோல்விக்கு காரணம் என்று வெளிப்படையாக குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியில் இருந்துமுகமது மொகிம் நீக்கப்படுவதாக அக்கட்சியின் தலைமை அறிவித்துள்ளது. கட்சி விரோதசெயல்களில் ஈடுபட்டதாகக் கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## “என் கேரக்டரையே புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்களே..” : அமித் ஷாவுக்கு ஸ்டாலின் சவால்



திருவண்ணாமலை, டிச.16-

திருவண்ணாமலையில் திமுக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்புநிகழ்ச்சி மிக பிரம்மாண்டமாக நேற்று மாலை நடைபெற்றது. இதில் 1.30 லட்சம் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு இளைஞர் அணி செயலாளரும்,துணை முதல் வருமான உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

பொதுச்செயலாளர் துரைமுருகன், திமுக முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணை பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, திருச்சி சிவா, ஆ.ராசா, ப.செல்வராஜ், கனிமொழிகருணாநிதி,மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுப்பணித்துறை அமைச்சரும், மாவட்ட செயலாளருமான எ.வ.வேலு வரவேற்றார்.

இதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது: எதிரில் உள்ள உங்களை பார்க்கும் போது, 50 ஆண்டுகள் டைம் டிராவல் செய்து பின்னாடி போனது போன்று உள்ளது. உங்கள் மாதிரி இளைஞராக கிராமம்தோறும், தமிழகம் முழுவதும் பயணம் செய்து இளைஞர் அணியை வளர்த்தெடுத்ததை எல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். அப்படி உழைத்து வளர்த்திட்ட திராவிட முன்னேற்ற கழகம் 75 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறது.

தாழ்ந்த தமிழகமே என்று கவலைப்பட்ட காலத்தை மாற்றி இப்பேது திரும்பி பாருங்கள் தமிழ்நாட்டை என்று சொல்லுகின்ற காலத்திற்கு நாம் வந்துள்ளோம்.

அவர்கள் தலைமுறை அடுத்த கட்டத்திற்கு வந்ததும், அவர்கள் உழைப்பு, தியாகம், கெள்கை உணர்வுகளை அடுத்தடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று தலைவர் கருணாநிதி சிந்தித்து உருவாக்கியதுதான் இந்த இளைஞர் அணி.

1980 ல் ஜூலை 2ம் தேதி மதுரை ஜான்சி ராணி பூங்காவில் இளைஞர் அணியை தொடங்கினோம். இப்போது அந்த பணியை உதயநிதியிடமும், உங்களிடமும் ஒப்படைத்துள்ளோம். கழகத்திற்கு எது தேவை என்பதை உணர்ந்து செயல்படுகிறார் உதயநிதி.

இந்தியாவிலேயே பாஜகவுக்கு எதிராக போராடிக்கொண்டிருக்கின்ற ஒரே கட்சி திமுக தான். அவர்களால் வெற்றி கொள்ள முடியாதது தமிழ்நாடு மட்டும் தான். அதனால் தான் அமித்ஷா போன்றவர்களுக்கு எல்லாம் நம்மீது எரிச்சல். அண்மையில் அமித்ஷா பேசும் போது, பிஹாரில் வெற்றி பெற்றுவிட்டோம். அடுத்த இலக்கு தமிழ்நாடு தான் என்று கூறுகிறார்.

அமித்ஷா அவர்களே, நீங்கள் அல்ல, உங்கள் படையையே கூட்டி வந்தாலும் உங்களால் இங்கு எதுவும் நடக்காது. இது தமிழ்நாடு. என்னுடைய கேரக்டரையே புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்களே. அன்போடு வந்தால் அரவணைப்போம். ஆணவத்தோடு வந்தால் அடிபணியமாட்டோம் எதிர்த்து நிற்போம். திராடவிட மாடல் அரசின் சாதனைகளை புத்தகமாக அச்சிடும் அளவிற்கு ஏராளமானவற்றை செய்திருக்கிறோம். பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம். இதனை எல்லாம் மக்களிடம் தெரிவிக்க வேண்டும்.

தேர்தல் நெருங்கி வந்துவிட்டது, மக்களிடம் கூறுங்கள் 10 ஆண்டுகாலம் ஆட்சியில் தமிழ்நாட்டை படுபாதாளத்தில் தள்ளிய அதிமுகவினர், உத்தமர் போன்று வந்து ஓட்டு கேட்பார்கள். தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்வதை வழக்கமாக வைத்திருக்கின்ற பாஜகவினர் பொய்பரப்புரை செய்வார்கள். 2026 தேர்தலில் மக்கள் முன் இருக்கக் கூடிய கேள்வி, இன்னும் 50 ஆண்டுகள் முன்னோக்கி நடைபோட போகிறோமா?

இல்லை, பின்னோக்கி இழுக்க முயற்சிப்பவர்களுக்கு அடிபணியபோகிறோமா? அந்த கேள்விக்கு மக்கள் அளிக்கப் பேகின்ற விடை தான். திராவிட மாடல் ஆட்சி 2.0. அதற்கு அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும். திமுகவின் எதிர்காலத்தில் தான் தமிழ்நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. நீங்கள் தான் திமுகவின் 2.0 வின் அடித்தளமாக இருக்க வேண்டும். அந்த வெற்றிக்கான பயணத்தை இன்றே தொடங்குங்கள் என்றார்.

## தமிழக சட்டசபை தேர்தல்; அதிமுகவில் விருப்ப மனு வினியோகம் தொடக்கம்



சென்னை, டிச.16-

2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலையொட்டி விருப்ப மனு வினியோகத்தை அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் தொடங்கிவைத்தார். தேர்தலில் போட்டியிட விருப்ப மனுவை பூர்த்தி செய்து, இபிஎஸ் இடம் சேலம் மாவட்ட நிர்வாகிகள் வழங்கினர்.

தமிழக சட்டசபைத் தேர்தல் அடுத்தாண்டு நடக்க உள்ளது. வழக்கமாக ஜனவரி மாதத்துக்குப் பிறகுதான், அரசியல் கட்சிகள் தேர்தலை நோக்கி வேகமெடுத்து செயல்படும். டிசம்பர் மாதத்தின் மத்தியிலேயே, அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தலை நோக்கி விறுவிறுப்பு காட்டி வருகின்றன. ஏற்கனவே, அ.ம.மு.க.,வும் காங்கிரசும், விருப்ப மனு பெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்னையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில், இன்று (டிச.,15) தேர்தலில் போட்டியிட விருப்ப மனு வினியோகத்தை அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் தொடங்கிவைத்தார். தேர்தலில் போட்டியிட விருப்ப மனுவை பூர்த்தி செய்து, இபிஎஸ் இடம் சேலம் மாவட்ட நிர்வாகிகள் வழங்கினர்.

கட்சியினர் வரும் டிசம்பர் 23ம் தேதி வரை விருப்ப மனு அளிக்கலாம். தினமும் காலை 10:00 முதல் மாலை 5:00 மணி வரை மனுக்களை பெறலாம். பூர்த்தி செய்து, 23ம் தேதி மாலை 5:00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

## “தவெகவுக்கு வழங்கப்படும் சின்னம் 15 நிமிடத்தில் உலகப் புகழ் பெறும்” புஸ்ஸி ஆனந்த் சஸ்பென்ஸ்



நாமக்கல், டிச.16-

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் தவெக ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடுவார் எனவும், அவரை மூத்த தலைவர்களான செங்கோட்டையன் மற்றும் புஸ்ஸி ஆனந்த் ஆகியோர் இக்கூட்டத்தில் அறிமுகப்படுத்துவார்கள் எனவும் தகவல் வெளியானது.

இந்த நிலையில், திருச்செங்கோட்டில் நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், “ஒவ்வொரு தொகுதியிலும் விஜய்யின் அறிவுறுத்தலின்படி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி, திருச்செங்கோட்டில் நடைபெறுகிறது.

தவெகவின் வேட்பாளர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் மட்டும் தான் அறிவிப்பார். ஊடகவியலாளர்கள் தயவு செய்து எதையாவது ஒன்றை போட்டுவிடாதீர்கள். வரும் 2026ம் ஆண்டு தேர்தலில் தவெக தலைவர் விஜய் முதல்வராக வருவார். எந்த கட்சியாவது எங்களைப்போல் மாநாடு நடத்த முடியுமா.

மற்ற கட்சிகள் எல்லாம் ரூ.200, ரூ.300 கொடுத்து தான் கூட்டம் கூட்ட வேண்டும். யாருக்காவது தைரியம் இருந்தால் பணம் கொடுக்காமல் கூட்டம் போடுங்கள், அனைவரும் வாருங்கள் என சொல்லுங்கள் வருவார்களா என பார்ப்போம். ஆனால் தவெக தலைவர் விஜய் வந்தால் கூட்டம் தானாக வந்துவிடும்.

தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தலைவர் விஜய் தான் வேட்பாளர். விஜய் சினிமாத்துறையில் உச்சத்தை விட்டுவிட்டு தமிழக மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என வந்துள்ளார்.

தமிழகத்தில் புயல், மழை என எந்த பாதிப்பு வந்தாலும் தவெக பாடுபடும். தமிழகம் இக்கட்டான சூழலில் உள்ளது. தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்து ஏமாற்றி விட்டார்கள் என மக்கள் நினைக்கின்றனர். அதன் வெளிப்பாடு தான் இங்கு கூடியுள்ள கூட்டம். மின் கட்டண உயர்வால் விசைத்தறிக் கூடங்கள் மூடுவிழா கண்டுவிட்டது. கூடிய விரைவில் தவெகவுக்கு அருமையான சின்னம் வழங்கப்பட உள்ளது. சின்னம் வந்த 15 நிமிடத்தில் அது உலகப் புகழ் பெறும்.” என்றார்.

கட்சியின் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன் பேசும்போது, ‘‘வரும்சட்டப்பேரவை தேர்தலில் தவெக வரலாறு படைக்கும். கூட்டணியை வரவேற்கிறோம். ஆனால் விஜய்யை முதல்வராக ஏற்று கொள்பவர்களை மட்டுமே நாங்கள் ஏற்று கொள்வோம்.

ஒரு இயக்கம் நன்றாக வளர வேண்டும் என்றால் அதற்கு நல்ல தலைமை வேண்டும். அது விஜய்யால் மட்டுமே முடியும். கடந்த 50 ஆண்டுகளாக ஒரே இயக்கத்திலும், 9 முறை எம்எல்ஏவாகவும் பணியாற்றி இருக்கிறேன். சமுதாய முன்னேற்றத்துக்கு விஜய் முக்கிய பங்காக இருப்பார்’’ என்றார்.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், தவெக பிரச்சார பொதுச் செயலாளரான அருண் ராஜ், மாவட்ட செயலாளர்கள் செந்தில்நாதன், சதீஸ், பிரதீப் உள்பட கட்சியின் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கேரளாவில் பெற்ற வெற்றி தமிழகத்திலும் எதிரொலிக்கும்: நயினார் நாகேந்திரன் நம்பிக்கை



சென்னை, டிச.16-

கேரளாவில் திருவனந்தபுரம் மாநகராட்சி தேர்தலில் பாஜ பெற்ற வெற்றி விரைவில் தமிழகத்திலும் எதிரொலிக்கும் என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: கேரளாவில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் திருவனந்தபுரம் மாநகராட்சியை பாஜ கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது. 45 ஆண்டுகளாகத் தோற்கடிக்கவே முடியாது என்ற இறுமாப்புடன் இருந்த கேரள இடது சாரி முன்னணியை பாஜ தனித்து களம் கண்டு திருவனந்தபுரம் மாநகராட்சியைக் கைப்பற்றியுள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் பல்வேறு உள்ளாட்சிகளில் பாஜ கால் பதித்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வெற்றிக்குக் காரணம் பிரதமர் மோடி மீது உள்ள மக்களின் நம்பிக்கையும், கேரள பாஜ தொண்டர்களின் தொய்வில்லாத உழைப்பும்தான்.

பூத் கமிட்டி உறுப்பினர்களின் இடைவிடாத உழைப்பின் காரணமாகக் கிடைத்த பாஜகவின் இந்த அபார வெற்றி தமிழக பாஜகவிற்குப் புது உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. தமிழகத்திலும் பாஜ எல்லா சட்டசபை தொகுதியிலும் பூத் வாரியாக கமிட்டிகளை நியமித்துவிட்டது. அவர்களுக்கான பயிற்சியும் நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப்பணி நடந்து வருகிறது. விரைவில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகும். அப்போது பூத் கமிட்டி உறுப்பினர்கள் தங்கள் வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர் பட்டியலைச் சரி பார்க்க வேண்டும்.

தகுதியில்லாத புது வாக்காளர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தால் அதனை நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரளாவில் பெற்ற வெற்றி விரைவில் தமிழகத்திலும் எதிரொலிக்கும். தமிழகத்திலும் ஆளும் கட்சிக்கு எதிரான மன நிலை மக்களிடம் காணப்படுகிறது. அதனை நாம் முறையாகப் பயன்படுத்தி தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வரவிருக்கும் சட்டசபை தேர்தலில் வெற்றியைப் பெற்றுத் தருவோம். பிரதமர் மோடிக்கு அவ்வெற்றியைச் சமர்ப்பிப்போம். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

## சத்தமில்லாமல் புதுக்கட்சி தொடங்கிய ஓபிஎஸ்: டிச.23ம் தேதி முறைப்படி அறிவிக்க திட்டம்

சென்னை, டிச.16-

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தை அதிமுகவில் சேர்க்க பழனிசாமி தொடர்ந்து மறுத்து வரும் நிலையில், ஓபிஎஸ் தலைமையில் கடந்த மாதம் நடைபெற்ற அதிமுக உரிமை மீட்புக்குழு மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில், "இதுவரை அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழுவாக செயல்பட்டு கொண்டிருந்த அமைப்பு இனி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற தொண்டர்கள் உரிமை மீட்பு கழகமாக செயல்படும்" என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டிச.15ம் தேதி மீண்டும் மாவட்ட செயலாளர்களை கூட்டி, முக்கிய முடிவெடுக்கப்படும் என்று அந்த கூட்டத்தில் ஓபிஎஸ் கூறியிருந்தார்.

அதன் பின்னர் டிசம்பர் மாத தொடக்கத்தில் ஓபிஎஸ் டெல்லி சென்ற நிலையில், கட்சியை பதிவு செய்ய சென்றதாக கூறப்பட்டது. ஏற்கெனவே அறிவித்த கூட்டத்தை ஓபிஎஸ் தள்ளிவைத்திருந்த நிலையில், ஓபிஎஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையின் லெட்டர் பேடில் ‘உரிமை மீட்பு குழு’ என்பதற்கு பதிலாக ‘உரிமை மீட்பு கழகம்’ என மாற்றப்பட்டுள்ளது. முகவரியும் பசுமை வழிச்சாலைக்கு பதிலாக, நந்தனம் முகவரி கொடுக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் ஓபிஎஸ் சத்தமின்றி புதுக்கட்சியை தொடங்கிவிட்டதாக அவரது ஆதரவாளர்கள் மத்தியில் பேச்சு நிலவுகிறது.

மேலும் ஓபிஎஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில், மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையில், சென்னை வேப்பேரியில் உள்ள ஒய்எம்சிஏ அரங்கில் மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் டிச.23ம் தேதி மாலை 5 மணிக்கு நடைபெற இருப்பதாக அறிவித்துள்ளார். இந்த கூட்டத்தில் அல்லது அடுத்த நாள் வரும் எம்ஜிஆர் நினைவு தினத்தில் முறைப்படி புதுக்கட்சியை அறிவிக்க ஓபிஎஸ் திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இது குறித்து ஓபிஎஸ் ஆதரவாளர்களிடம் கேட்டபோது, "கட்சி ஒன்றிணைப்புக்கு பழனிசாமி முட்டுக்கட்டையாக உள்ளார். தேர்தல் நெருங்கி வருகிறது. தன்னை நம்பி வந்தவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய கடமை ஓபிஎஸ்ஸுக்கு இருக்கிறது.

அதனால் விரைந்து ஒரு முடிவை எடுக்க வேண்டியுள்ளது. எனவே, முந்தைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குழுவானது, கழகமாக மாறியுள்ளது. அது தொடர்பாக டிச.23ம் தேதி நிர்வாகிகளுடன் விவாதித்து ஓபிஎஸ் முக்கிய அறிவிப்பை வெளியிட இருக்கிறார்" என்றனர்.



# ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே பூக்கும் பிரம்ம கமலம் பூ

மானாமதுரை டிச.16

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மானாமதுரையில் ஆண்டுக்கு ஒருமுறை இரவில் மட்டுமே பூக்கும் பிரம்ம கமல பூவை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து தீபமேற்றி வழி பட்டனர்.

மானாமதுரை நகராட்சி வெள்ளையன் தோப்பு பகுதியில் கிருஷ்ணவேணி என்பவர் வசித்து வருகிறார்.

இவரது வீட்டிற்கு அருகில் உள்ள தோட்டத்தில் துளசி, வெற்றிலை உள்ளிட்ட பல்வேறு மூலிகைச் செடி, பூக்கள் மற்றும் காய்கறி செடிகளை வளர்த்து வருகிறார்.

கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே இரவில் பூக்கும் பிரம்ம பூச்செடியையும் வளர்த்து வருகிறார்.

3 ஆண்டுகளாக வருடத்திற்கு ஒருமுறை மட் டும் இரவு நேரத்தில் பூத்த கமல பூ, நேற்று முன்தினம் இரவு மீண்டும் பூத் ததையடுத்து கிருஷ்ண வேணியின் வீட்டிற்கு அருகில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை கள் பார்த்து பூச்செடிக்கு முன் கோலமிட்டு, விளக்குகளை ஏற்றி வழி பட்டனர்.





# கிழக்கு தாம்பரத்தில் தேமுதிக இளைஞர் அணி செயலாளர் பிறந்த நாள் விழா தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக சார்பில் கொண்டாட்டம்

தாம்பரம், டிச.16-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் மாநில இளைஞர் அணி செயலாளர் வி.விஜயபிராபகரன் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் அனகை முருகேசன் அவர்களின் அறிவுத்தின்படி தாம்பரம் மாநகர தெற்கு பகுதி தேமுதிக சார்பில் பகுதி செயலாளர் கேட் எம்.தர்மா தலைமையில் கொண்டாடபட்டது. இந்த விழாவில் செங்கல்பட்டு மாவட்ட துணை செயலாரும், தாம்பரம் சட்ட மன்ற தொகுதி பொருப்பாளருமான மா.செழியன் கலந்து கொண்டு கட்சி கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார். இதில் மாவட்ட மகளீர் அணி செயலாளர் பாத்திமா, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணை செயலாளர் சுஜாத்தா நந்தினி, மாவட்ட பிரிதி நிதி பாலமுருகன், பகுதி துணை செயலாளர்கள் தமிழரசி, ஏழுமலை,பகுதி பொருளாளர் லோகநாதன், தெற்கு பகுதி மகளிர் அணி செயலாளர் சுமதி, துணை செயலாளர் ரம்யா, கிழக்கு பகுதி இளைஞர் அணி செயலாளர் சங்கர், தெற்கு பகுதி கேப்டன் மன்றம் நெரும்பூர் ராஜேந்திரன்,

63, வட்ட செயலாளர் தேன் (எ) லட்சுமிகாந்தன், குமார், 64 வட்டம் கன்னியப்பன், 47வது வட்ட சந்தோஷ், 48வது வட்ட செயலாளர் அண்ணாமலை, 46வது வட்ட செயலளர் காந்தி, 62வது வட்ட செயலாளர் இளங்கோ, கிழகக்கு வட்ட துணை செயலாளர் ஏழுமலை, துணை செயலாளர் அசோக்குமார், 46வது வார்டு அவைத்தவர் ஜெயசந்திரன், 63வது மேற்கு வட்டம் அவைத்தலைவர் பரமசிவம், துணை செயலாளர் சின்னதம்பி, பார்த்தீபன், பொருளாளர் பீரித்தி, சரவணன் செயலாளர் 47வது துணை செயலாளர் ராஜ்குமார், ஜான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தாலுகா நரிக்குடி ஒன்றியம் ஆனைகுளம் கிராமத்தில் கண்மாய் கரையில் இயற்கையை வளப்படுத்தும் வகையில் காவை தென் இந்திய கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் முன்னேற்ற நல சங்கத்தின் சார்பாக மாநில பொதுச்செயலாளர் முருகேசன் அவர்கள் தலைமையில் 800 பணவிதைகள் நடும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வீரசோழன் காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர்முத்துப்பாண்டிதிருச்சுழி காவல் நிலைய தலைமை காவலர் பூபதி, ஆனைகுளம் கிராம நிர்வாக அலுவலர் கோட்டைமுத்து, கிராம உதவியாளர் ராணி, கிராமபஞ்சாயத்து ஊராட்சி செயலாளர் ஜெயமணி மற்றும் தொழிற்சங்கத்தின் விருதுநகர் மாவட்ட தலைவர் கணேசன், மாவட்ட செயலாளர் வாசு, காரியாபட்டி நகர துணை தலைவர் பாலமுருகன், நரிக்குடி ஒன்றிய துணைச் செயலாளர் சுரேஷ் மற்றும் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் ரெக்கன், வீறுச்சாமி மற்றும் கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.விழா ஏற்பாட்டினை தலைமை காவலர் பூபதி அவர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் : மதுரை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாதந்தோறும் ரூபாய் 1000 கிடைக்க பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை கடந்த 15.09.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனடிப்படையில் மதுரை மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் கீழ் 4.55 இலட்சம் மகளிர் மாதம் ரூ.1,000 ரூபாய் பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறிந்து, தீர்வு காணும் வகையில் அனைத்து கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற சிறப்புத் திட்டத்தை தொடங்கி வைத்து மதுரை மாவட்டத்தில் மொத்தம் 347 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், இம்முகாமின் சிறப்பு நிகழ்வாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுள்ள விடுபட்ட மகளிர்கள் இம்முகாமிற்கு சென்று விண்ணப்பங்கள் அளிக்க தமிழ்நாடு அரசு வழிவகை செய்தது. எந்த ஒரு தகுதி உடைய மனுதாரர்கள் விட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து வருவாய் துறை அலுவலர்கள் மகளிர் உரிமைத் தொகை வேண்டி கொடுக்கப்பட்ட மனுதாரரின் வீட்டிற்கு நேரடியாக சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு 12.12.2025 முதல் மதுரை மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 66,287



மகளிர்களுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மகளிர் சமுதாயம் முன்னேற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், புதுமை பெண் திட்டம், மகளிரை தொழில் முனைவோராக்கும் திட்டம், மகளிர் சுய உதவிக் குழு முதலிய புரட்சிகரமான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு ஆண்களுக்கு சமமாக உரிமைகள் பெற்று படிப்படியாக முன்னேறி வருகின்றனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற குடும்பத் தலைவி திருமதி. காயத்திரி அவர்கள் தெரிவித்ததாவது:

எனது பெயர் காயத்திரி நாங்கள் மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டம், மருதங்குடி கிராமத்தில் வசித்து வருகிறோம். எனது கணவரும், நானும் கூலி வேலை செய்து வருகிறோம். எங்களுக்கு கிடைக்கின்ற சிறிய வருமானத்தை வைத்து



குடும்பம் நடத்தி வருகிறோம். இந்நிலையில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பம் பதிவு செய்யுமாறு எங்கள் கிராமத்தில் தன்னார்வலர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து கூறினார்கள்.

விளம்பரத்தினை பார்த்து குடும்ப அட்டை, ஆதார் அட்டை ஆகியவற்றை எடுத்துச் சென்று விண்ணப்பிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஏற்கனவே எனது மாமியார் அவர்களுக்கு தனியாக மாதம் ரூ.1000/ வங்கி கணக்கிற்கு வருகிறது. நானும் குடும்ப அட்டை, ஆதார் அட்டை அகியவற்றை கொண்டு சென்றேன். அவர்களே எனது விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து எனது கையொப்பத்தினை பெற்றுக் கொண்டனர். உடனடியாக என்னுடைய விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டது என தொலைபேசி எண்ணிற்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. 11.12.2025 அன்று எனது வங்கிக் கணக்கில் 1 ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளது என குறுஞ்செய்தி எனது தொலைபேசி எண்ணிற்கு வந்தது. இந்த குறுஞ் செய்தியை பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்து எனது கணவர் மற்றும் அருகில் உள்ள உறவினர்களிடம் தெரிவித்தேன். மேலும் 12.12.2025 அன்று காலை எனது வங்கி கணக்கிற்கு ரூ.1000/ வரவு வைக்கப்பட்ட குறுஞ்செய்தி என்னுடைய தொலைப்பேசி எண்ணிற்கு வந்தது. என்னைப்போன்ற குடும்பத் தலைவிகளின் நலனை கருத்திற்கொண்டு இத்தகைய சிறப்பு வாய்ந்த திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, மதுரை மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் வாயிலாக பயன்பெற்று வரும் அனைத்து குடும்பத் தலைவிகள் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.



# மானாமதுரையில் நாளை மின்தடை ( டிச17)

சிவகங்கை, டிச.16-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் துணை மின்நிலையத்தில் நாளை (டிச17) மாதாந்திர பராமரிப்புப் பணிகள் காலை 10 மணி முதல் மாலை 5மணி வரை மானாமதுரை, சிப்காட், ராஜகம்பீரம்,கட்டிக்குளம், மிளகனூர்,முத்தனேந்தல், தெ.புதுக்கோட்டை, கீழப்பசலை,சங்கமங்கலம், குறிச்சி, முனைவென்றி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என செயற்பொறியாளர் சொர்ணப்பா அறிவித்துள்ளார்

# பஹல்காம் தாக்குதல் சம்பவம்; குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கிறது என்ஐஏ

புதுடில்லி, டிச.16-

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) இன்று சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கிறது.

ஜம்மு காஷ்மீரின் சுற்றுலா தலமான பஹல்காமில் கடந்த ஏப்., 22ல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் துணை அமைப்பான, 'தி ரெசிஸ்டென்ஸ் பிரன்ட்' பொறுப்பேற்றது.

கடந்த ஜூலையில் பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் பஹல்காம் சம்பவத்தில் தொடர்புடைய மூன்று பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை ஆய்வு செய்தபோது, காஷ்மீரை சேர்ந்த நபர் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள் சப்ளை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து குல்காமை சேர்ந்த கட்டாரியா, 26, என்பவரை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கில், உள்ளூர்வாசிகளான பஷீர் மற்றும் பர்வேஸ் ஜோதர் கைது செய்யப்பட்டனர்.அனைத்து விசாரணைகளும் முடிவடைந்த நிலையில், சிறப்பு நீதிமன்றத்தில் என்ஐஏ அதிகாரிகள் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய இருக்கின்றனர்.

குற்றப்பத்திரிகையில் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு உதவிய உள்ளூர்வாசிகள் பெயர்கள் இடம்பெறும் என என்ஐஏ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.




# கோவை மாவட்டம் காரமடை டாக்டர்.ஆர்.வி கல்லூரியில் 16வது பட்டமளிப்பு விழா

கோவை, டிச.16

கோவை மாவட்டம் காரமடை டாக்டர். ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியில் 16ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. எஸ்.என். ஆர். அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலரும், டாக்டர்.ஆர்.வி. கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் மற்றும் செயலருமான திரு.சுந்தர் அவர்கள் தலைமையேற்று வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி.என்.ரூபா அவர்கள் அனைவரையும் வரவேற்று கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். தமிழ்நாடு ஐ.சி.டி அகாடமியின் முதன்மை செயல் அதிகாரி திரு. ஸ்ரீகாந்த் வெங்கட்ராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்றினார். அவர் பேசிய உரையில்,"கல்வி பயின்று பட்டம் பெறும் மாணவர்களுக்கு தம் வாழ்க்கையில் இன்று ஒரு சிறப்பான நாள். பெற்றோர்களின் கனவை நனவாக்கும் நாள். மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கும் அற்புதமான நாள். பட்டம் பெற்ற மாணவர்கள் வளர்ந்து வரும் தொழில் துறையிலோ, வர்த்தகத் துறையிலோ சிறந்த தொழில் முனைவோராக சாதிக்க முடியும். தம் தனித் திறமைகளாலும், உயர் கல்வியினாலும் நல்ல வேலை வாய்ப்பினை பெற முடியும். உங்கள் ஆசிரியர்களின் தியாகமும், பெற்றோர்களின் தியாகமுமே உங்கள் உயர்வுக்கு காரணம். கற்ற கல்வியினால் அடுத்த தலைமுறையை மேன்மேலும் உயர்த்துவது உங்களின் கடமை. கணினி அறிவியலில் வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவுத்துறை நமக்கு சவாலான ஒன்று. இத்துறையை தேர்ந்தெடுத்து பயின்று மாணவர்கள் நன்மை அடையலாம் " என்று மாணவர்களுக்கு பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து 2021-2024 மற்றும் 2022-2024 ஆம் கல்வியாண்டில் வணிகவியல், கணினி அறிவியல், உயிர் தொழில்நுட்பவியல் துறையில் இளநிலை மற்றும் முதுநிலையில் பயின்று முடித்த 174 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். பட்டம் பெற்ற மாணவர்களை கல்லூரியின் இணை நிர்வாக அறங்காவலர் திருமதி.சபிதா ராமகிருஷ்ணன் அவர்கள், அறங்காவலர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள், அறங்காவலர் திருமதி. பிரியங்கா சுந்தர் அவர்கள் பாராட்டி வாழ்த்தினர். இவ்விழாவில் கல்லூரியின் துணை முதல்வர்கள், அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், கல்லூரியின் நிர்வாக மேலாளர் திரு. மனோகரன், கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியின் நிர்வாக செயலாளர் திரு.சீனிவாசன், ஐ.சி.டி.அகாடெமியின் மேலாளர் திரு. விஜய் பாபு, அகாடெமியைச் சேர்ந்த திரு.ஆனந்த், திரு.அழகிரி அவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# கோவை மாவட்டம் கீரணத்தம் ஊராட்சியில் சமூக தணிக்கை சிறப்பு கிராம சபை கூட்டம்

கோவை, டிச.16

கோவை மாவட்டம், சர்க்கார் சாமகுளம் ஊராட்சி ஒன்றியம், கீரணத்தம் ஊராட்சியில் சமூக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் பணிபுரியும் திட்ட பணியாளர்களுடன் சிறப்பு கிராம சபை கூட்டம் சமூக தணிக்கை (2024-2025) நிதி ஆண்டிற்காக கீரணத்தம் சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊராட்சி செயலர் பாலாஜி தலைமை வகித்தார். இதில் ஒன்றிய பற்றாளர் சந்திரசேகர் கலந்துகொண்டு கடந்த ஆண்டின் சமூக தணிக்கை அறிக்கை பற்றிய விவரங்களை கூட்டத்தின் முன் சமர்ப்பித்து எடுத்துக் கூறினார். மேலும் பயனாளிகளின் உரிமைகள் கடமைகள் பற்றியும் கள ஆய்வு செய்ததின் விவரங்கள் மற்றும் வரவு செலவு கணக்குகளை வாசித்துக் காண்பித்து பின் பணியாளர்களின் குறை நிறைகளை கேட்டறிந்தார். திட்ட பணியாளர்கள் கூட்டத்தின் வாயிலாக 100 நாள் வேலை நாட்களை 150 நாட்களாகவும், ஊதிய உயர்வு செய்திட ஆவணம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். நிகழ்வில் உடன் வட்டார வள மைய பயிற்றுநர் பாலமுருகு, ஒன்றிய பணி மேற்பார்வையாளர் அமுதா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மகாலட்சுமி இருந்தார்கள்.




# வன்னியர் சங்கம் பாட்டாளி மக்கள் கட்சி ஆர்ப்பாட்ட அறப்போராட்டம்

கோவை டிச.16

கோவை மாவட்டம் கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பாட்டாளி மக்கள் கட்சி வன்னியர் சங்கம் சார்பில் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டியும், வன்னியர்களுக்கு 10.5 % விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டியும், அனைத்து சாதியினருக்கும் உரிய இட ஒதுக்கீடு வழங்க வேண்டியும் கோவையில் மாபெரும் ஆர்ப்பாட்ட அறப்போராட்டம் நடைபெற்றது.

இந்த அறப்போராட்டத்திற்கு வன்னியர் சங்கத்தின் கோவை மாவட்ட செயலாளர் எம்.முருகேசன் தலைமையில், பாட்டாளி மக்கள் கட்சி கோவை மாநகர் மாவட்ட செயலாளர் சு. அருண்குமார் வரவேற்புரையில், தெற்கு மாவட்டத் தலைவர் பழ. கருப்புசாமி, மேற்கு மாவட்ட செயலாளர் சு.சரவணகுமார், கிழக்கு மாவட்ட செயலாளர் ப. சதீஷ்குமார், வடக்கு மாவட்ட தலைவர் மடத்தூர் வீர மணிகண்டன், கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் நாகராஜ், வடக்கு மாவட்ட செயலாளர் அக்னி தேவன், ஆகியோர் முன்னிலை வகிக்க, பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில பொருளாளர் எஸ். சையது மன்சூர், புதுவை பாவூரை சேர்ந்த வன்னியர் சங்கத்தின் மாநில செயலாளர் கே. துரைசாமி (எ) அரி, மாநில துணைச் செயலாளர் ஏ.வி. பார்த்தசாரதி, மாநில அமைப்பு துணைத் தலைவர் ப.குமார், மாநில செயற்குழு உறுப்பினர் எம்.தேவ்குமார், மேற்கு மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணி, மடத்தூர் பூபதி மற்றும் செந்தில்குமார் உள்ளிட்ட ஏராளமான வன்னியர் சங்கத்தை சார்ந்தவர்களும் பாட்டாளி மக்கள் கட்சியை சார்ந்தவர்களும் அறப்போராட்டத்தில் கலந்து கொண்டு சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டியும், வன்னியர்களுக்கு 10.5% விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டியும், அனைத்து சாதியினருக்கும் உரிய இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பினர்.

இறுதியில் கிழக்கு மாவட்ட துணை செயலாளர் செந்தில் ராஜா நன்றியுரை வழங்கினார்.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி மெயின் ரோடு பகுதியில் தெரு நாய்கள் அதிக அளவில் சுற்றித் திரிகின்றன அவைகள் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை கடித்து காயம் ஏற்பட்டது. இதுகுறித்து மாவட்ட பேரூராட்சி உதவிகளின் இயக்குனருக்கு புகார் தெரிவிக்கப்பட்டது இதற்கு பதில் அனுப்பிய பேரூராட்சி செயலாளர். தினமும் நாய்களுக்கு தடுப்பூசி போடுவதாக தவறான செய்தியை அளித்துள்ளனர். நாய்களை கட்டுப்படுத்த எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தவறான அறிக்கை அனுப்பிய செயல் அலுவலர் மீது மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பாரா?

# தலைநகரில் நிலவும் கடும் பனிப்பொழிவால் விமான சேவைகள் பாதிப்பு

புதுடில்லி, டிச.16-

டில்லியில் நிலவும் கடும் பனிப்பொழிவு காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. கடும் பனிப்பொழிவு காரணமாக விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. விமானங்களின் நிலை அறிந்து டில்லி விமான நிலையத்திற்கு வருமாறு பயணிகளுக்கு இண்டிகோ மற்றும் ஏர் இந்தியா போன்ற விமான நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளன. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்; கடும் பனிபொழிவால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நாங்கள் வானிலையை தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறோம். உங்களைப் பாதுகாப்பாகவும், சரியான நேரத்திலும் கொண்டு சென்று விடுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம். எங்கள் வலைதளம் அல்லது செயலியின் மூலம் உங்கள் விமான நிலையை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். எங்கள் குழுவினர் உங்களுக்கு உதவுவார்கள், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரையில் வாசன் கண் மருத்துவமனையின் 80 ஆவது புதிய கிளை



மதுரை, டிச.16-

மதுரையில் வாசன் கண் மருத்துவமனையின் 80வது புதிய கிளையை சேதுபதிமேல்நிலைப் பள்ளிக்கு எதிரில் சிறப்பாக துவக்கியது.நிகழ்ச்சியின்சிறப்பு அழைப்பாளர்களாக

சென்னை கமலா சினிமா அதிபர் வள்ளியப்பன் தலைமையில் வடமலையான் மருத்துவமனை தலைவர் புகழகிரி, வாசன் கண் மருத்துவமனை குழும தலைவர் பிரியங்கா சிங்வி,

தலைமை இயக்க அதிகாரி கமல் பாபு ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி புதிய கிளையை துவக்கி வைத்தனர். விழாவில் பல்வேறு இன்சூரன்ஸ் நிறுவன அதிகாரிகள் பன்னீர்செல்வம், லோகேஸ்வரி, ஸ்வர்ணலதா, ஜெயக்குமார், பாஸ்கரன்பால் சிங்,மருத்துவர்கள் பயனாளிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.7066.11 கோடி வசூல் சாதனை

மதுரை, டிச.16-

சிறுசேமிப்புத் திட்டங்களில் அதிக வசூல் சாதனை புரிந்த முகவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் கேடயங்கள், பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

மதுரை மாவட்டம் 2022 -2023 ஆம் நிதியாண்டில் அஞ்சலக சிறுசேமிப்புத்திட்டங்களில் ரூ.2213.23 கோடி, 20232024 ஆம் நிதியாண்டில் ரூ.2566.48 கோடி, 20242025 ஆம் நிதியாண்டில் ரூ.2286.40 கோடி, ஆக கடந்த மூன்று நிதியாண்டுகளில் மொத்தம் ரூ.7066.11 கோடி வசூல் சாதனை எய்தப்பட்டுள்ளது. தற்பொழுது நடப்பு 2025-2026 ஆம் நிதியாண்டில் ஏப்ரல் 2025 முதல் நவம்பர் 2025 முடிய 8 மாதங்களில் ரூ.1315.40 கோடி வசூல் சாதனை எய்தப்பட்டுள்ளது. இந்த வசூல் சாதனையில் அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களின் சேவை மிகவும் முக்கியமானதாகும். படித்த கிராமப்புற மற்றும் நகர்ப்புற பெண்கள் மற்றும் ஆண்கள் சுய வேலைவாய்ப்பாக அஞ்சலக சிறுசேமிப்பு முகவர் பணியினை செய்து வருகின்றனர்.

தற்பொழுது 20242025 ஆம் நிதியாண்டில் சிறுசேமிப்பு வசூலில் மாவட்ட அளவில், மாநகராட்சி மண்டல அளவில், நகராட்சி அளவில் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் அதிக வசூல் சாதனை புரிந்த அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களுக்கு மதிப்பிற்குரிய மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேடயங்கள், பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

இந்த நிகழ்வில் மதுரை வடக்கு மாசி வீதியைச் சேர்ந்த சிறுசேமிப்பு மகளிர் முகவர் திருமதி S.ஆதிலெட்சுமி என்பவர் அஞ்சலக தொடர்வைப்புத் திட்டத்தில் ரூ.6,54,51,025/ (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருபத்தைந்து மட்டும்) வசூல் சாதனை செய்து தொடர்ந்து 17 வருடங்களாக மதுரை மாவட்ட அளவில் முதலிடம் பெற்று வருகின்றார்.

மதுரை திருப்பாலையைச் சேர்ந்த சிறுசேமிப்பு நிலை முகவர் திரு N.M.செந்தில்குமார் என்பவர் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.21,37,84,000/ (ரூபாய் இருபத்தோரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) வசூல் சாதனை செய்து மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளார்.

தமிழகத்தில் பொதுமக்களிடையே சேமிப்புப்பழக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கிராமப்புற மக்களும் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து பயன்பெற்றிட ஏதுவாக ஊராட்சி ஒன்றிய அளவில் ஒவ்வொரு ஊராட்சியிலும் படித்து வேலைவாய்ப்பில்லாத மகளிருக்கு சுய வேலைவாய்ப்பாக அஞ்சலக சிறுசேமிப்பு முகவராக (MPK-BY Agents) நியமனம் செய்து, அவர் மூலமாக சம்பந்தப்பட்ட ஊராட்சியிலுள்ள 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணிபுரியும் அனைத்து விநிழி ஸிணிநிஷி பணியாளர்கள் மற்றும் ஊராட்சியில் வசிக்கும் அனைத்து பொதுமக்களையும் அஞ்சலக ஆர்.டி.சேமிப்பு கணக்கை துவக்கி பராமரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அஞ்சலகங்களில் முதலீடு செய்யப்படும் தொகை மத்திய / மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. சிறுசேமிப்பு நாட்டிற்கு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பயன்படுகிறது. எனவே, அஞ்சலக சிறுசேமிப்பின் அவசியத்தையும், பயன்களையும் பொது மக்களுக்கு சிறுசேமிப்பு முகவர்கள் எடுத்து சொல்லி அதிக அளவில் அஞ்சலகங்களில் முதலீடு செய்து சிறுசேமிப்பு வசூலில் மதுரை மாவட்டம் தொடர்ந்து சிறப்பான இடத்தை பெற்றிட அனைத்து பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

பொதுமக்கள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, பாடுபட்டு உழைத்து சேமித்த, தங்கள் வருமானத்தை சிட்பண்டு, தனியார் நிதி நிறுவனங்கள் போன்றவற்றில் முதலீடு செய்து ஏமாறாமல் தடுக்கவும் அனைத்து தரப்பு பொதுமக்களும் தங்கள் எதிர்கால வாழ்க்கை இனிமையாகவும் பொருளாதாரப் பாதுகாப்புடன் சிறந்து விளங்கிடவும், மத்திய அரசின் பாதுகாப்பான, உத்தரவாதமான அஞ்சலகங்களில் தங்களுக்கேற்ற சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்தும், ஒவ்வொரு குடும்பமும் பொருளாதார சிக்கலின்றி வாழ்க்கை நடத்திட ஏதுவாக ஒவ்வொரு ஊராட்சியில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் வீட்டிற்கு ஒரு ஆர்.டி (அஞ்சலக தொடர் வைப்புத்திட்டம்) சேமிப்புக்கணக்கு துவக்கி பராமரித்து வாழ்வில் வளம் பெற்றிட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.அன்பழகன் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.எம்.முரளிதரன் அவர்கள், மாவட்ட சேமிப்பு அலுவலர் திருமதி செ.பரமேஸ்வரி அவர்கள், தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் வருகின்ற 20.12.2025 அன்று, சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் மாபெரும் தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்

சிவகங்கை டிச.16

சிவகங்கை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து மாபெரும் தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு, வருகின்ற 20.12.2025 அன்று சிவகங்கை, அரசு மகளிர் கலைக்கல்லூரியில் காலை 09.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை நடைபெறவுள்ளது.



இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 100க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு, 3,000க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு இளைஞர்களை தேர்வு செய்யவுள்ளனர். இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 8ஆம் வகுப்பு முதல் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு, பட்டப்படிப்பு, டிப்ளமோ, ஐடிஐ போன்ற கல்வித் தகுதியுடைய அனைவரும் கலந்து கொள்ளலாம்.

மேலும், இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது சுயவிவரம் (Resume), கல்விச்சான்று, ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல்களுடன் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் நாளன்று காலை 09.00 மணிக்கு வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்கலாம்.

இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் https://forms.gle/Fm1ZxFqhF-gEqkUAfA என்ற இணைப்பில் முன்பதிவு செய்தும், முகாமில் பங்கேற்க உள்ள தனியார்துறை நிறுவனங்கள் https://forms.gle/BN21qKKoBc7JvvcU8 என்ற இணைப்பில் பதிவு செய்வதும் அவசியமாகும்.

அதுமட்டுமன்றி, தனியார்துறை வேலைவாய்ப்பு இணையமான www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்திலும் வேலைநாடுநர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்களது விவரங்களை பதிவு செய்திடல் வேண்டும். மேலும், வேலைவாய்ப்பு தொடர்பான பல்வேறு தகவல்களைப் பெற SIVAGANGAI EMPLOYMENT OFFICE என்ற Telgram channelல் இணைந்து பயன்பெறலாம். இம்முகாமில் வேலைவாய்ப்பு பெற்று பணிநியமனம் பெறும் பதிவுதாரர்களுடைய வேலைவாய்ப்பு பதிவு மூப்பு இரத்து செய்யப்பட மாட்டாது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பம், பல்வேறு திறன் பயிற்சிகளுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை விண்ணப்பம் ஆகியவைகளும் வழங்கப்படும்.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலைநாடுநர்கள் இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் அதிக அளவில் பங்கேற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



■ கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி அரிய வகை மணல் ஆலையில் இருந்து, மிடாலம், ஏழுதேசம், கொல்லங்கோடு கடற்கரை கிராம பகுதிகளில் சுமார் 1144 ஹெக்டேர் நிலபரப்பில் மணலில் இருக்கும் கனிமங்களை பிரித்து எடுக்கும் அரசின் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டு பாஜக தன்னார்வ தொண்டு நிறுவன பிரிவு சார்பில் நாகர்கோவிலில் உள்ள மாவட்ட ஆட்சியரிடம் மனுமேலும் கருத்து கேப்பு கூட்டத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில்,நிறுத்தி வைக்கப்பட்ட கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டிய தேவை இல்லை என்ற நிலையில் மாவட்ட கடற்கரை மேலாண்மை குழுவின் தலைவராகிய (மாவட்ட ஆட்சி தலைவர் )தமிழக அரசுக்கு பரிந்துரை செய்து கடற்கரையோர மக்களின் வாழ்வாதாரம் மேம்படவும், இயற்கையாகவே உள்ள கனிமங்கள் நிறைந்த மணலில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சால் ஏற்படும் புற்றுநோயிலிருந்து மக்களை பாதுகாக்கவும் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்திட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்..



# கடலூர் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.50,000 மதிப்பீட்டிலான உதவித்தொகையினை வழங்கினார்

கடலூர், டிச.16-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பொதுமக்களின் குறைகளை களைவதற்காகவும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியான பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் திங்கள்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது.

இன்றைய கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 605 மனுக்கள் பெறப்பட்டன. பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றைய தினம் நடைபெற்ற குறைதீர்வு முகாமில் அகில இந்திய குடிமை பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி1 முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் முதன்மைத் தேர்வு எழுதுவதை ஊக்குவிக்குக்கும் பொருட்டு வழங்கப்படும் ரூ.50,000 மதிப்பீட்டிலான காசோலை அகில இந்திய குடிமை பணிகள் முதல்நிலைத் தேர்வில் வெற்றிபெற்றதற்காக ஒரு மாற்றுத்திறனாளி பயனாளிக்கு வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) தீபா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) தங்கமணி, துணை ஆட்சியர் (பயிற்சி) கே.டியுக் பார்க்கர், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் அடுத்த சிறுகாஞ்சி ஊராட்சி பொதுமக்கள் 300க்கும் மேற்பட்டோர் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு

## சிறுக்காஞ்சி ஊராட்சியாகவே தொடர வேண்டி பொதுமக்கள் வேண்டுகோள்

வேலூர் டிச.16

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காயிதே மில்லெத் கூட்ட அரங்கில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

இந்த குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகளை மனுக்களாக 500 மனுக்கள் அளித்தனர்.

மேலும் இக்கூட்டத்தில் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிறுகாஞ்சி கிராம ஊர் பொதுமக்கள் 300க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு அளித்தனர். இதில் இவர்கள் கூறியதாவது நாங்கள் சிறு காஞ்சி கிராமத்தில் பல தலைமுறையாக வாழ்ந்து வருகிறோம். எங்களது சிறுகாஞ்சி கிராமம் சுமார் 175 ஆண்டுகளாக தனி ஊராட்சியாக இயங்கி வருகிறது. இதனை சதுப்பேரி ஊராட்சியுடன் இணைக்க அரசு ஆணையம் வெளியிட்டுள்ளதாகவும், இந்த நிலையில் மேற்படி சிறுகாஞ்சி ஊராட்சியை எந்த ஒரு ஊராட்சியுடன் நினைக்க வேண்டாம் எனவும், தனி ஊராட்சியாக இயங்கி வருவது போல் எங்கள் சிறுகாஞ்சி ஊராட்சியாக தொடர்ந்து செயல்பட வேண்டும் என வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இதன்படி எங்களது சிறு காஞ்சி கிராமத்தை தனி ஊராட்சியாகவே செயல்பட ஆவணங்கள் ஏற்று எங்களது சிறுகாஞ்சி கிராம மக்கள் கோரிக்கை ஏற்று எங்களுக்கு தனி ஊராட்சி அமைக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# சிட்னியில் பயங்கரவாத தாக்குதல்: ஆஸ்திரேலிய அமைச்சரிடம் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் போனில் பேச்சு

புதுடில்லி, டிச.16-

ஆஸ்திரேலியாவின் பிரபலமான சுற்றுலா தலமான பாண்டை கடற்கரையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தந்தை சஜித் அக்ரம் 50, மகன் நவீத் அக்ரம் 24 ஆகிய இரண்டு பேர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பொதுமக்கள் 16 பேர் கொல்லப்பட்டனர். இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உலக தலைவர்கள் பலரும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று (டிச.,15) ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் செனட்டர் பென்னி வோங் இடம் ஜெய்சங்கர் போனில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். இது குறித்து ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் செனட்டர் பென்னி வோங் உடன் சற்று முன்பு பேசினேன். பாண்டி கடற்கரையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்த சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்தேன், மேலும் முழு ஆதரவை தெரிவித்தேன். இவ்வாறு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

# வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மோசடி ஆவணங்களுக்கு போலி பட்டா வழங்கிய கவன ஈர்ப்பு பொதுக்கூட்டம்



வண்டலூர். டிச.16

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மோசடி ஆவணங்களுக்கு போலி பட்டா வழங்கிய வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், சர்வேயர், ஆகியோரின் சட்டவிரோத செயல்பாடுகளை அரசு கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் கவன ஈர்ப்பு பொதுக்கூட்டம் வாயிலாக சட்ட விரோதமாக சமூக விரோதிகளுக்கு துணை நின்று போலி ஆவணங்களை தயாரித்துக் கொடுத்த வட்டாட்சியர் பூங்கொடி, சர்வேயர் சுரேஷ், உள்ளிட்ட அலுவலர்களுக்கு பாராட்டு சான்றுகளும் அவர்களை பாராட்டி விருதுகளும் இன்று சமூக ஆர்வலர்களால் வழங்கப்பட்டது. மேலும் இதுபோல் உருவாக்கப்பட்ட சட்டவிரோத ஆவணங்களை கண்டறிய தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் ஸிஜிமியில் மனு செய்தால் ஒரு வருடத்திற்கு மேலாகியும் மேல்முறையீடு செய்தும் பல அறிவிப்புகள் வழங்கியும் தகவல் வழங்காமல் கள ஆய்வுக்கு அனுமதி வழங்காததால் தலைமையிடத்து துணை வட்டாட்சியரான பொது தகவல் அலுவலர்களுக்கும் மேல்முறையீட்டு அலுவலரான வட்டாட்சியர் அவர்களையும் பாராட்டி சான்றுகள் விருதுகள் வழங்கப்பட்டது. வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உயர் அலுவலரான வட்டாட்சியர், துணை வட்டாட்சியர்கள், எவரும் இல்லாத காரணத்தினால் அலுவலகத்தின் தபால் பிரிவில் கடிதத்துடன் கூடிய சான்றுகள் விருதுகள் வழங்கி அதற்கான ஒப்புதலை அரசாணை எண் 73/2018 படி பெறப்பட்டுள்ளது. அரசாணை மதித்து ஒப்புதல் வழங்கிய தபால் பிரிவின் ஆவண எழுத்தருக்கு சமூக ஆர்வலர் சார்பில் நன்றிகள். இந்த நிகழ்ச்சியின் ஏற்பாடு ஆனது மக்களுக்கான மக்கள் இயக்கம் பொதுச் செயலாளர் மதிப்புரு முனைவர் தி கார்த்திக் கண்ணன் அவர்கள் தலைமையில் மூத்த குடிமக்கள் நல சங்கம் தலைவர் மீனாட்சிசுந்தரம் அவர்களின் முன்னிலையில் மூத்த சமூக ஆர்வலர் பக்தவச்சலம் அவர்களின் சிறப்புரையில் மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் கொள்கை பரப்பு செயலாளர் முகுந்தராவ் அவர்களின் ஆலோசனைப்படி 20க்கும் மேற்பட்ட சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு இதில் மூத்த சமூக ஆர்வலர்கள் விஎல்டி.ஆர்.கிருஷ்ணன், சிவாஜி ராவ், ஹரிதாஸ், கிருஷ்ணன் பம்மல், மக்களுக்கான மக்கள் இயக்கம் இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர் துளசிதரன், தாம்பரம் மாநகர வாழ் மக்கள் நல சங்கங்களின் கூட்டமைப்பு துணை ஒருங்கிணைப்பாளர் ஜானகிராமன் உள்ளிட்ட பல சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியின் போது மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் பொதுச்செயலாளர் கார்த்திக் கண்ணன் கூறுகையில் கூடுவாஞ்சேரி நந்திவரம் கிராமத்தில் அமைந்துள்ள ஜெயலட்சுமி நகர் குடியிருப்போர் பகுதியில் ஒன்றரை ஏக்கர் பரப்பு உள்ள குடியிருப்போர் புஞ்சை நிலங்களை 2008 ஆம் ஆண்டு சமூக விரோதிகளால் விலை நிலங்களாக சென்ட் கணக்கில் நஞ்சை நிலம் என மோசடியான பொய்யான சட்டத்திற்கு புறமான செட்டில்மெண்ட் ஆவணம் உருவாக்கப்பட்டு இதற்கு உறுதுணையாக அப்போதைய வட்டாட்சியர், சார் பதிவாளர்கள், கிராம நிர்வாக அலுவலர் , வருவாய்த் துறை அலுவலர்களின் துணையோடு நடந்த சட்ட விரோத ஆவணங்களுக்கு தொடர்ச்சியாக 50க்கும் மேற்பட்ட ஆவணங்கள் உருவாக்கப்பட்டு ஜெயலட்சுமி நகர் குடியிருப்போர் நல சங்கம் சார்பாக தலை மனு வழங்கியும் அதனை ஒரு பொருட்டாக மதிக்காமல் தொடர்ந்து மோசடி ஆவணங்களை சமீபத்தில் சார்பதிவாளர் அவர்கள் பதிவு செய்துள்ளார். இதனை குறித்து மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு மோசடி ஆவணங்களை ரத்து செய்வதற்கான பதிவுச் சட்டம் பிரிவு 53, 54, 83 போன்ற பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி மனு அளிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக கடலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த ஆறு மாதம் முன்பாக மோசடி ஆவணங்களுக்கு போலி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இருவகையான நில மோசடி வரைபட ஆவணங்கள் நில அளவை சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. ரோடு சாலைகளுக்கு கால்வாய்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. நந்திவரம் ஜெயலட்சுமி நகர் நாகாத்தம்மன் கோயில் மற்றும் ஐயப்பன் கோயில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அங்குள்ள குடியிருப்போர் மக்களை குறிப்பாக வரதன் குடும்பத்தினர் உள்ளிட்ட நந்திவரம் ஜெயலட்சுமி நகர் குடியிருப்போர் பகுதியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட நபர்கள் அனைவரும் பொய்யான சட்டவிரோத மோசடி ஆவணங்களை வைத்துள்ள சட்ட விரோதிகளான முருகன், செந்தில் குமார், ரமேஷ், ஆயிஷா, இன்னும் பலர் ரவுடிகளின் துணையோடு அடி ஆட்களை வைத்து மிரட்டிக்கொண்டு சட்ட ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்தும் வகையில் பல மிரட்டல்களை செய்து கொண்டு வருகின்றனர். இதன் மீது சுமார் 50க்கும் மேற்பட்ட புகார்கள் மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், காவல் ஆணையர், காவல் ஆய்வாளர், காவல் உதவி ஆணையர், கூடுதல் துணை ஆணையர், மாவட்ட பதிவாளர், சார் பதிவாளர் உள்ளிட்டோருக்கு புகார் கோரிக்கை மனுக்கள் வழங்கியும் இதுவரையிலும் மோசடி ஆவணங்களை ரத்து செய்ய எவரும் முன்வரவில்லை என்பதால் இதுபோன்ற மோசடி ஆவணங்களுக்கு போலி பட்டாக்கள் போலி நில சான்றுகள் ஆவணங்கள் வழங்குவதை நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற பெரும் கோரிக்கையுடன், தேச பற்றுடன் நாட்டின் வளர்ச்சி மீது அக்கறை கொண்டு, முதல்வரின் கவனத்திற்கும் அரசு உயர் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் இன்றைய தினம் இந்த பாராட்டு விழா அமைதியான முறையில் காவல்துறையின் முன்னிலையில் நடத்தப்பட்டது. இந்த விழாவில் கலந்து கொண்ட அனைத்து சமூக ஆர்வலர்களுக்கும் பத்திரிகை நண்பர்களுக்கும் காவல் துறை நண்பர்களுக்கும் நன்றி கலந்த வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறது. மேலும் இது போன்ற நுறைகேடான நிர்வாகத்தை வெளிக்கொண்டு வர வழங்கப்பட்ட ஆர் டி ஐ தகவல் பெறும் உரிமைச் சட்டம் மக்கள் மீது நிராகரிப்பு செய்யப்பட்டதால் சட்டப்பிரிவு 2ஜி படி கள ஆய்வு மேற்கொள்ள வழங்கப்பட்ட மனு மீது அனுமதி மறுக்கப்பட்டதால் சம்பந்தப்பட்ட அலுவலகங்களை நேரில் சந்தித்து திருப்பத்தூர் மாவட்டம் இளைய சமூக ஆர்வலர் திரு ரோமன் சார் என்பவர் தமிழ்நாடு கவர்னர் அலுவலகம் இல்லம் அமைந்துள்ள கவர்னர் மாளிகையில் ஆய்வு செய்ய வழங்கப்பட்ட மனு மீது அமைதிக்கப்பட்ட கடிதத்தை குறிப்பிட்டு காமித்து அறிவிப்பில் இணைத்து வழங்கியும் இதுவரை அனுமதி மறுக்கப்பட்டதால் வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிப்பில் உள்ள அனைத்து ஆவணங்களும் போலியான மோசடி ஆவணங்களா என்ற கேள்வி சமூக ஆர்வலர் மத்தியில் எழுந்துள்ளது எனவே சமூக ஆர்வலர் என்ற முறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் உயர்திரு மு க ஸ்டாலின் அவர்கள் கூறியவாறு தமிழ்நாட்டையும், நாட்டு மக்களையும் தலைகுனிய வைக்க மாட்டேன் என்ற நல்லெண்ணத்தை போற்றும் விதத்திலும் அதனை நிலை நாட்டும் வகையிலும் இது போன்ற முறைகேடான சம்பவங்களை செயல்பாடுகளை அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் அலுவலர்களின் சட்ட விரோத செயல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர வேண்டும் என்ற இந்திய குடிமகனுக்கு வழங்கி உள்ள கடமையின் படி இன்று சமூக ஆர்வலர் அமைப்புகள் கூட்டமைப்பு மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டு அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும் இஊன் மீது அரசு தனி கவனம் செலுத்தி சம்பந்தப்பட்ட வருவாய் துறை பதிவுத் துறை போலி ஆவணங்களை தயாரித்த சட்ட விரோதிகள் ,அரசு அலுவலர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உள்ளது. என்றும் மக்கள் பணியில் மக்களுக்காகவே செயல்பட்டு கொண்டு வரும் இயக்கமானது மக்களுக்கு நன்மை செய்யும் அரசுக்கு பாராட்டுக்கள் தெரிவிப்பது மக்களுக்கான மக்கள் இயக்கம்

# "பாமகவில் இருந்து விலகவும் தயார்" அன்புமணி குற்றச்சாட்டுகளுக்கு ஜி.கே.மணி உருக்கமான பதில்



சென்னை, டிச.16-

"ராமதாஸ் அன்புமணி இருவரும் ஒன்றாக இணைந்தால், நான் பாமகவில் இருந்து விலக தயார், பாமகவில் எனக்கு எந்தப் பதவியும் வேண்டாம். எம்எல்ஏ பதவியைக் கூட ராஜினாமா செய்கிறேன்" என பாமக கவுரவத் தலைவர் ஜி.கே. மணி தெரிவித்துள்ளார்.

சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் இன்று செய்தியாளர்களை சந்தித்த அவர், "35 வயதில் அன்புமணியை மத்திய அமைச்சராக்கி அழகு பார்த்தவர் ராமதாஸ். இன்றைக்கு பாமக வளர்ந்ததற்கு ராமதாஸ்தான் முக்கிய காரணம். ராமதாஸ், பாளையங்கோட்டை சிறைக்கு தான் செல்லவில்லை மற்ற எல்லா சிறைக்கும் சென்றுவிட்டார்.

பாமகவுக்கு ஒரு சோதனை என்றால், ராமதாஸால் எப்படி தாங்கிக் கொள்ள முடியும். அன்புமணி, ராமதாஸைப் பார்த்து என் அப்பா குழந்தை மனசாக மாறிவிட்டார், மனநலம் பாதிக்கப்பட்டிருக்கிறார் எனக் கூறிகிறார். அவருடன் இருப்பவர்கள் அவரை கெடுக்கிறார்கள் என அன்புமணி கூறுவது மிக அநாகரீகமானது. அன்புமணியின் செயல்பாடுகளால் ராமதாஸ் தான் கண்ணீர் வடிக்கிறார்.

என்னைப் பார்த்து, எங்கள் கட்சியில் உழைத்தவர்களைப் பார்த்து ராமதாஸ் உடன் இருப்பவர்களை எல்லாம் பார்த்து அன்புமணி துரோகி என்கிறார். ஜி.கே. மணி தான் என்னையும், எங்க அப்பாவையும் பிரித்துவிட்டார் என்று சொல்கிறார். இதெல்லாம் எவ்வளவு வேதனையாக இருக்கும்.

அன்புமணிக்கு ஒன்றிய அமைச்சர் பதவி வாங்கிக் கொடுக்குமாறு ராமதாஸை நான்தான் சம்மதிக்க வைத்தேன். இதுகுறித்து பேசும்போது ராமதாஸ் என் மீது மிகவும் கோபப்பட்டார். அன்புமணிக்கு எந்த வகையிலும் நான் கெடுதலோ, துரோகமோ நினைத்ததில்லை.

அப்பாவையும் மகனையும் பிரித்துவிட்டதாக மனசாட்சி இல்லாமல் பேசுகிறார் அன்புமணி. அப்பாவையும், மகனையும் பிரிக்க முடியுமா?. உங்கள் மகன் அன்புமணியை நீங்கள் பார்க்காதீர்கள் என நான் சொல்ல முடியுமா, இல்லை நான் சொன்னால் ராமதாஸ் கேட்பாரா, பிறகு எப்படி நான் அவர்களைப் பிரிக்க முடியும்? ராமதாஸும் அன்புமணியும் உட்கார்ந்து பேசினால்தான் தீர்வு கிடைக்கும். ராமதாஸிடமிருந்து, கட்சியை பிரித்து எடுத்துச் செல்லவேண்டுமென அன்புமணி நினைக்கிறார்.

நான் ராமதாஸிடன் இருப்பதால் தான் அன்புமணி இப்படிப் பேசுகிறார். நாங்கள் ராமதாஸை ராஜாவாக பார்க்கிறோம். அன்புமணியை ராஜா வீட்டு கன்னுக்குட்டியாக பார்க்கிறோம். ராஜா வீட்டு கன்னுக்குட்டி, எட்டி உதைக்கும், சீறிப்பாயும் என நாங்கள் பொறுமையாகத்தான் இருக்கிறோம்.

ராமதாஸ் அன்புமணி இருவரும் ஒன்றாக இணைந்தால், நான் பாமகவில் இருந்து விலக தயார், பாமகவில் எனக்கு எந்தப் பதவியும் வேண்டாம். அன்புமணி யார் யார் துரோகிகள் என நினைக்கிறாரோ, அவர்கள் அனைவரும் கட்சியில் இருந்து வெளியேறத் தயார்.

நானோ என் குடும்பத்தினரோ கட்சியில் இருக்க மாட்டோம்; எம்எல்ஏ பதவியைக் கூட ராஜினாமா செய்கிறேன். வேறு கட்சியிலும் சேரமாட்டோம், மீண்டும் நீங்கள் அழைத்தால் பாமகவில் சேருகிறோம். ராமாதாஸுடன் வந்து அன்புமணி செயல்படட்டும். கட்சி நன்றாக இருக்க வேண்டும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161